DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 87/2019**

**அ.சா.11**

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. சங்கர் | Caste: | |
| Father's Name: | ராமசாமி | Calling: | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.03.2026

( எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது தென்காசி மாவட்டம் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2019 ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது நயினார்கோவில் காவல்நிலைய கு.எண்.7/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 323,324,506(ii), 379(NH) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act வழக்கு சம்பந்தமாக இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு C.No. 6/SJ&HR/RMD/2019, Dated: 18.01.2019 ன் உத்தரவு பிரகாரம் மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த உத்தரவு **அ.சா.ஆ.9**. இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வளத்தியப்பன், சத்தியவேணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை அன்றைய தினம் 23.00 மணிக்கு பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.10**. வரைபடம் **அ.சா.ஆ.11**.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.16 18:00:36 +0530

பின்னர் வழக்கில் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த புகார்தாரரான பிரபு என்பவரை பரமக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான ஜெயலெட்சுமி, ருத்ரா, பார்வை மகசர் சாட்சிகளான வளத்தியப்பன், சத்தியவேணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியை தேடி வந்ததில் 19.01.2019 ம் தேதி காலை 8.00 மணிக்கு நயினார்கோவில் பஸ் நிறுத்தம் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரியான காளேஷ்வரன் என்பவரை கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை 8.15 மணி முதல் 9.00 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் சண்முகநாதன் முன்னிலையில் தயாரித்தேன். பின்னர் தன் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன்படி அதே சாட்சிகளுடன் மூவலூர் கிராமத்தில் உள்ள எதிரி காளேஷ்வரன் வீட்டின் பின்பகுதியில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 12 செ.மீ நீளமுள்ள கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் சண்முகநாதன் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 20.01.2019 ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான நாகு, முருகேஷ்வரி, பஞ்சு, கிருஷ்ணன், சண்முகநாதன் மற்றும் விக்னேஷ்வரன், சார்பு ஆய்வாளர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.16 18:00:42 +0530

சட்டப்பிரிவுகளை 147, 148, 294(b), 323,324,506(ii), 379(NH) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act லிருந்து 342, 294(b), 324,506(ii), IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act பிரிவாக மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.12**. பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் மற்றும் காயம்பட்ட நபருக்கு சாதிச்சான்றிதழ் பெற வேண்டி பரமக்குடி வட்டாட்சியர் அவர்களுக்கு 07.05.2019 ம் தேதி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் இவ்வழக்கின் 2 வது எதிரியான கார்செல்வம் என்பவரை 25.07.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு மூவலூர் அருகே வளத்தீஸ்வரன் அய்யனார் கோவில் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 28.07.2019 ம் தேதி இவ்வழக்கின் காயம்பட்ட நபர் பிரபு மற்றும் எதிரிகள் காளேஷ்வரன் மற்றும் கார்செல்வம் இருவருக்கும் சாதிச்சான்றிதழ் வழங்கிய பரமக்குடி வட்டாட்சியர் திரு சரவணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த பரமக்குடி மருத்துவ அதிகாரி டாக்டர் திரு. ஜெகன்நாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 31.07.2019 ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324,506(ii), 342 IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கால்நடை மருத்துவமனை அருகில் என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவம் கால்நடை மருத்துவமனை வளாகத்திற்குள் அதாவது காம்பவுண்ட்டுக்குள் நடந்துள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 பிரபுவின்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 18:00:46 +0530

வீடு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 20 அடி தூரம். கால்நடை மருத்துவமனைக்கு எதிரே அங்கன்வாடி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகே ஊராட்சி நடுநிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான். நான் அங்கன்வாடியில் வேலை பார்த்தவர்களையோ ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் வேலை பார்த்தவர்களையோ கால்நடை மருத்துவமனையில் வேலை பார்த்தவர்களையோ விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரில் பெயர் குறிப்பிட்டு மூன்று நபர்களும் மற்றும் எதிரிகளுடைய அம்மா மற்றும் முகம் தெரியாத 6 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் மருத்துவர் ஜெகன்நாதன் புகார்தாரர் பிரபுவை அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் கம்பால் அடித்துவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் அ.சா.1 பிரபு எதிரி கார்செல்வம் பின்பக்கமாக வந்து குத்தினான் என சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் எதிரி காளேஷ்வரன் அ.சா.1 ஐ கத்தியால் எந்த இடத்தில் குத்தினார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, முதுகில் குத்தியதாக சொல்லியுள்ளார். என்னுடைய விசாரணையில் மருத்துவர் அ.சா.1 க்கு முதுகில் காயம் இருந்தததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் அ.சா.2 ஜெயலெட்சுமி தனது கணவரை முதுகிலும் நெஞ்சிலும் குத்தி கொல்லாமல் விடமாட்டேன் என கூறியுள்ளார் என்றால் எனது கணவரின் கழுத்து, நடுவயிறு, இடது நெஞ்சு, இடது பக்க இடுப்பு ஆகிய இடங்களில் கத்தியால் கீறி இரத்தக்காயத்தை ஏற்டுத்தினார் என கூறியுள்ளார். என்னுடைய விசாரணையில் அ.சா.3 முருகேஷ்வரி எதிரிகள் கார்செல்வம்,

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 18:00:51 +0530

காளேஷ்வரன் ஓடும்போது உன் சாவு என் கையில்தான் என்று சொல்லிவிட்டு போனார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கால்நடை மருந்தகத்திற்கு மேற்குபுறம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் இரும்பு கம்பி உள்ளது என்றால் சரிதான். கால்நடை மருந்தகத்தின் வளாகம் இரும்பு கம்பியால் சுற்றி பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியான மெயின்ரோடு பொதுமக்கள் அதிகம் போய் வரக்கூடிய பகுதி என்றால் சரிதான். புகாரில் அ.சா.1 பிரபு பகல் 3.00 மணியளவில் வீட்டிலிருந்த என்னை சரமாறியாக தாக்கினார்கள் என கூறியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் எந்த இடத்திலும் கால்நடை மருந்தகத்தின் அருகே சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையின் முடிவில் இரண்டு எதிரிகள் மீதுதான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என தெரியவந்தது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 பிரபு குடித்துவிட்டு கால்நடை மருத்துவமனை வேலியில் தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், நேரத்தில், இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் நான் எந்த ஆயுதங்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்களை பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 18:00:56 +0530

செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்திற்கும் அ.சா.1 குடும்பத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்திற்கு முன்பு நிலப்பிரச்சனை இருந்து வந்தது என்றும் அந்த முன் விரோதம் காரணமாக கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 18:01:00 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)